# ஆக்சிஸ் பேங்க் லிமிடெட்

**Southern Recovery Cell:** 2வது தளம், கருமுத்து நிலையம், எண்.192, அண்ணாசாலை, சென்னை - 600 002, Ph: 044-2888 8307 / 8308 / 8309

## e - ஏல விற்பனை அறிவிப்பு

**2002 ம் ஆண்டு கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச்சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு** சொத்துக்கள் அமலாக்கச்சட்டத்தின் கீழ் வங்கியிடம் அடமானம் வைக்கப்பட்டுள்ள அசையா சொத்தின் விற்பனை.

**Mr.M.சீனிவாசன் என்பவர் இங்கு கீழே அட்டவணையில் முழுமையாக விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்தினை அடமானம் வைத்ததன் பேரில் ஆக்சிஸ் வங்கிடமிருந்து கடன் பெற்றுள்ளார். கடனை முழுமையாக செலுத்தாததினால் 2002-ம் ஆண்டு SARFAESI சட்டம் பிரிவு 13 (2) ன் கீழ் 16.04.2013 தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பினை கடன்தாரர் Mr.M.சீனிவாசன், S/o. Mr.K.P.மணியன், உரிமையாளர்: M/s. ஸ்ரீ லக்ஷ்மி ஜுவல்லரி (G), ஸ்ரீ லக்ஷ்மி காம்ப்ளக்ஸ், 36 கிராஸ் கட் ரோடு, காந்திபுரம், கோயம்புத்தூர் - 641 012 மற்றும் கதவு எண்.29, "ஸ்ரீ லக்ஷ்மி பவனம்" கிழக்கு திருவேங்கடசாமி ரோடு, R.S.புரம், கோயம்புத்தூர்-641 002 என்பவர் வங்கிக்கு முறையே செலுத்த வேண்டியுள்ள கடன்தொகை** 15.04.2013 அன்றுள்ளபடி **ரூ.5,04,06,463.97 (ரூபாய் ஐந்து கோடியே நான்கு லட்சத்து ஆறாயிரத்து நானூற்று அறுபத்து மூன்று மற்றும் பைசா தொன்னூற்று ஏழு மட்டும்) (இந்த தொகை 31.03.2013 வரையிலான வட்டியுடன்)** மற்றும் அதன் மீதான 01.04.2013 முதல் வட்டி, கட்டணங்கள், விளைவுகள், இலக்குகள் முதலானவை மற்றும் சொத்துக்களை தன்வசம் எடுத்துக்கொண்டது மற்றும் சொத்துகள் விற்பனை தொடர்பான செலவுகள் உள்ளிட்ட அனைத்து செலவுகளையும் **சேர்த்து இந்த அறிவிப்பு கிடைத்த 60 நாட்களுக்குள் செலுத்துமாறு கோரியது.**

**கடன்தாரர் கோரிக்கை அறிவிப்பில் கோரப்பட்டிருந்த வங்கிக்கு செலுத்த வேண்டிய கடன் தொகையை செலுத்த தவறியதால் கீழே அட்டவணையில் காணும் ஈடுபெற்ற** மேற்படி சட்டத்தின் பிரிவு 13(4)ன் படி கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்தினை **04.07.2013** அன்று **வங்கியானது தன்வசம்** உடைமையாக்கியுள்ளது.

**கடன்தாரர் வங்கிக்கு செலுத்த வேண்டிய கடன் தொகை முழுவதையும் செலுத்த தவறியதால் சொத்தினை ஈடாக பெற்றிருக்கும் கடன் கொடுத்தவரான ஆக்சிஸ் வங்கியானது, கீழே விவரிக்கப்பட்ட சொத்தினை** "உள்ள இடத்தில் உள்ளவாறு" மற்றும் "உள்ளது உள்ளவாறு" என்ற அடிப்படையிலும் **("as is where is" & 'as is what is " condition) SARFAESI ACT 2002 பிரிவு 13(4)-ன் படியும் மற்றும் உடன்படிக்க விதி 8 & 9 பாதுகாப்பு நடைமுறை விதிகள் 2002ன் கீழ் விற்பனை செய்ய முடிவெடுத்துள்ளது. கடன்தாரர் Mr.M.சீனிவாசன், என்பவர் வங்கிக்கு முறையே செலுத்த வேண்டிய கடன்பாக்கி** 14.05.2014 அன்றுள்ளபடி ₹ **5,94,17,507.53** (ரூபாய் ஐந்து கோடியே தொன்னூற்று நான்கு லட்சத்து பதினேழாயிரத்து ஐநூற்று ஏழு மற்றும் பைசா ஐம்பத்து மூன்று மட்டும்) மற்றும் **15.05.2014 முதல்** வட்டி, இதர செலவுகளுக்கு கட்டுப்பட்டவை **ஆகும்.**

## சொத்து விபரம்

**கடனுக்கு ஈடான அடமான சொத்தானது Mr.M.சீனிவாசனுக்கு சொந்தமானது (Covered under Doc.No.2166/1986) கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், கோயம்புத்தூர் சார் பதிவு மாவட்டம் மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பழைய T.S.எண்.8/558 & 559, புதிய T.S.எண்.8/897, கதவு எண்.59/29, கதவு எண் (பழைய).11/77, (புதிய).27/29, மதிப்பீடு எண்.111465, தெற்கு பக்கத்திலுள்ள மனை எண்.11, கிழக்கு திருவேங்கடசாமி ரோடு, R.S.புரம், கோயம்புத்தூர் டவுன், கோயம்புத்தூர் தாலுகா, என்னும் முகவரியிலுள்ள 6670 சதுர அடி அல்லது தோராயமாக 15 சென்ட் மற்றும் 122.5 சதுர அடி நிலம் மற்றும் அதிலுள்ள கட்டிடங்கள், இணைக்கப்பட்டுள்ளவை. உள்ளே மற்றும் வெளியே செல்லும் மாமுல் ரோடு வழிப்பாதை உரிமை மற்றும் அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். எல்லைகள்: ராமகிருஷ்ணன்-க்கு சொந்தமான மனை எண்.18-க்கு வடக்கு, Dr.முனுசாமி-க்கு சொந்தமான மனை எண்.10-க்கு கிழக்கு, கிழக்கு மேற்காக திருவேங்கடசாமி ரோட்டிற்கு தெற்கு, சென்னி வீறி செட்டி-க்கு சொந்தமான மனை எண்.12-க்கு மேற்கு. அளவுகள்: வடக்கு தெற்காக இருபுறமும் 145 அடி, கிழக்கு மேற்காக இருபுறமும் 46 அடி.**

## e- ஏலத்தின் தேதி மற்றும் நேரம்

**18.06.2014** காலை 11.00 மணி முதல் - நண்பகல் 12.00 மணி வரை

தேவைப்படின் தலா 5 நிமிடங்கள் கொண்ட 3 நீட்டிப்புகள் விற்பனை முடியும் வரை அனுமதிக்கப்படும்

**குறைந்தபட்ச கேட்பு விலை** : **ரூ.5,60,00,000/-** (ரூபாய் ஐந்து கோடியே அறுபது லட்சம் மட்டும்)

**டேவணித்தொகை** : **ரூ.56,00,000/-** (ரூபாய் ஐம்பத்து ஆறு லட்சம் மட்டும்)

**EMD** செலுத்தும் முறை : EFT/NEFT/RTGS **பரிமாற்றத்தின் மூலம்** "AXIS BANK LTD" to the credit of **A/c.No.090010633007 of SL-Funds In Transit, Axis Bank Ltd, 1133, 1135/36, Avinashi Road, PN Palayam, Coimbatore – 641 637,** Branch Code: 090: IFSC Code : UTIB0000090 **கணக்கில் வங்கியில் டெபாசிட் செய்ய வேண்டும்.**

**ஏல உயர்வு** : ரூ.1,00,000/-

**சொத்தினை பார்வையிடுதல் : 02.06.2014 அன்று காலை 11.00 மணி முதல் மதியம் 3.00 மணி வரை**

**ஆன்லைன் மூலமாக EMD உடன் விலைப்புள்ளிகள் சமர்பித்தல்: 03.06.2014 காலை 11.00 மணி முதல்**

**விலைப்புள்ளிகள் ஆன்லைன் மூலமாக EMD உடன் சமர்பிக்க கடைசி நாள்: 16.06.2014** மாலை 5.00 மணி வரை

### விதிகள் மற்றும் நிபந்தனைகள்

**1**.வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட சேவை வழங்குனர் M/s e-Procurement Technologies Ltd (ETL) நிறுவனத்தின் மூலம் வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியின் மேற்பார்வையில் e-ஏலம் முறையில் சொத்து விற்பனை செய்யப்படும்.

**2**.e-ஏல **ஆன்லைன்** e-ஏல விலைக்குறிப்பீட்டு படிவம், உறுதிமொழி, ஆன்லைன் ஏல விற்பனை விதிகள் மற்றும் நிபந்தனைகள் அடங்கிய e-ஏல டெண்டர் ஆவணம் ETL இணையத்தளத்தில் (website **http://sarfaesi.abcprocure.com**) இடம் பெற்றுள்ளன.

**3.உத்தேச விலைக்குறிப்பீட்டாளர்கள், செல்லத்தக்க டிஜிட்டல் கையொப்பமிட்ட சான்றிதழ் வைத்திருக்க வேண்டும். மின்னஞ்சல் (e-mail) முகவரியும் வைத்திருக்க வேண்டும். டிஜிட்டல் கையொப்பம் தொடர்பான விவரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: M/s e-Procurement Technologies Limited, Ahmedabad (Praveen kumar Thevar Contact No.09722778828 Contact No. 079-40230830-826. Fax No.079-40016816/876) and Chennai (Mr.Ashok Nattar – Contact NO.9940655790/044-64520331), E-mail id: fasupport@abcprocure.com.**

**4.டெண்டர் ஆவணத்தில் இடம் பெற்றுள்ள உரிய படிவத்தில் விலைக்குறிப்பீடுகளை (website http://sarfaesi.abcprocure.com**) என்ற இணையத்தளம் வாயிலாக ஆன்லைன் மூலம் சமர்ப்பிக்க வேண்டும். வேறு விதத்தில் சமர்ப்பிக்கப்படும் விலைக்குறிப்பீடுகள் பரிசீலனைக்கு தகுதியற்றவை.

**5.EMD தொகை மற்றும் இதரடெபாசிட்டுகளை** EFT/NEFT/RTGS வாயிலாக மேற்குறித்த வங்கி கணக்கில் செலுத்த வேண்டும்.

**6.EMD செலுத்தப்படாத விலைக்குறிப்பீட்டு படிவம் மற்றும் குறைந்த பட்ச கேட்பு விலைக்கு கீழ் கோரப்படும் படிவமும் முற்றிலும் நிராகரிக்கப்படும்.**

**7.விலைக்குறிப்பீட்டு படிவம் சமர்ப்பித்த பின்னர், e-ஏலம் முடிவடைவதற்கு முன்னர், விலைக்குறிப்பீட்டினையோ / டேவணித் தொகையினையோ (EMD) விலக்கி கொள்ள அனுமதிக்கப்படமாட்டாது.**

**8.ஆன்லைன் ஏல விற்பனை மேற்காணும் உரிய தேதியன்று உரிய நேரத்தில் தானாகவே தொடங்கிவிடும். ஏலம் / விலைக்குறிப்பீடு நடைபெறும் கால அளவு துவக்கத்தில் ஒரு மணி நேரமாக இருக்கும். பின்னர் விற்பனை முடிவடையும் வரை தானாகவே ஒவ்வொரு முறையும் ஐந்து நிமிடங்கள் நேரம் நீட்டிக்கப்படும்.**

**9**.ETL வழங்கியுள்ள மேற்காணும் இணையத்தளத்தின் வாயிலாக விலைக்குறிப்பீட்டு முறையில் ஆன்லைன் ஏல விலைக்குறிப்பீடு மட்டுமே நடைபெறும்.

**10.மேற்குறிப்பிட்ட தேதியன்று உரிய நேரத்தில் e-ஏலத்தில் பங்கேற்க வசதியாக தகுதியுடைய விலைக்குறிப்பீட்டாளர்கள் பயன்படுத்துவோர் பெயர் / அனுமதிச்சொல் (User name / Password) ஒதுக்கீடு செய்து முறைப்படுத்துவதற்காக e-ஏல நடைமுறைகள் குறித்து செயல் முறை விளக்கம் ஒன்று** ETL **வழங்கும்.**

**11.உயர்ந்தபட்ச விலைக்குறிப்பீட்டாளருக்கே சொத்து விற்கப்படும். சொத்தினை வாங்குபவர் அவர் தனது விற்பனை தொகையில் 25% ஐ (EMDயைக் கழித்துக் கொண்டு) உடனே செலுத்த வேண்டும் மற்றும் மீதி விற்பனை தொகையை ஏல விற்பனை தேதியிலிருந்து 15 நாட்களுக்குள் செலுத்த வேண்டும்.**

**12.**மேற்குறிப்பிட்ட தொகைகளை குறிப்பிட்ட கால வரம்புக்குள் அல்லது நீட்டிக்கப்பட்ட கால வரம்புக்குள் செலுத்த தவறும் பட்சத்தில் விற்பனை தானாகவே ரத்தாகிவிடும் என்பதுடன் அதுவரை டெபாசிட் (Deposit(s)) செய்யப்பட்ட தொகையையும் இழக்க நேரிடும்.

**13.வங்கியால் விற்பனை உறுதி செய்யப்பட்ட பின் மற்றும் உரிய முறையில் விற்பனை தொகையை செலுத்தி முடித்ததின் பேரில்** அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி **சொத்தினை வாங்குபவர் பெயரில் மட்டுமே விற்பனை சான்றிதழ் வழங்குவார்.**

**14.சொத்தினை வாங்குபவரே சட்டப்படியான உரிமை மாற்றுச் செலவுகளான பதிவு கட்டணம், முத்திரைத்தாள் செலவு போன்றவற்றை ஏற்க வேண்டும்.**

**15.சொத்து பொதுவாக "உள்ள இடத்தில் உள்ளவாறு" மற்றும் "உள்ளது உள்ளவாறு" எனும் அடிப்படையில் விற்கப்படும். e-ஏலத்தில் பங்கேற்பவர்கள், பங்கேற்பதற்கு முன் இவ்விஷயத்தில் அனைத்து விபரங்களையும் திருப்தியாக நன்கு அறிந்து தெரிந்து கொள்வது அவசியம். வங்கி எவ்விதத்திலும் சொத்தின் வகை, தரம், அளவு இவற்றிற்கு ஜாமீன் அல்லது உத்திரவாதம் எதுவும் வழங்காது. ஆர்வமுள்ள விலைக்குறிப்பீட்டாளர்கள் ஏலத்தில் பங்கேற்பதற்கு முன் சொத்தின் மின்கட்டண பாக்கி, சொத்து வரி பாக்கி, இதர சட்டப்படியான நிலுவைகள் முதலானவற்றைக் குறித்து தாங்களே விசாரித்து அறிந்து கொள்ள வேண்டும்.**

**16.**அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அறிந்த தகவல்களின்படியே, டெண்டர் ஆவணங்களின் மேலே குறிப்பிடப்பட்டுள்ள சொத்தின் விபரங்கள் தரப்பட்டுள்ளன. ஆனால் இவ்வாறு தரப்பட்டுள்ளதில் ஏற்படும் பிழை, தவறான தகவல் அல்லது விடுபட்டுப்போவது போன்றவை எதற்கும் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி பொறுப்பாகமாட்டார்.

**17.**வெற்றிப்பெறாத விலைக்குறிப்பீட்டாளர்களின் EMD தொகை விலைக்குறிப்பீட்டாளர்கள் தங்களது விலைக்குறிப்பீட்டு படிவத்தில் குறிப்பிட்டிருந்த வங்கி கணக்கிற்கு EFT / NEFT / RTGS மூலம் திருப்பியளிக்கப்படும். அது பற்றிய தகவல் அவர்களது மின்னஞ்சல் முகவரிக்கு தெரிவிக்கப்படும்.

**18.**அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிக்கு விலைகோரிக்கையை ஏற்றுக்கொள்வது, நிராகரிப்பது தள்ளிவைப்பது, மறு தேதிக்கு மாற்றம் செய்வது எந்த காரணமும் காட்டாமல் ஏலம் அனுமதி மறுப்பது மற்றும் விற்பனையின் விதிமுறை நிபந்தனைகளை எந்த முன்னறிவிப்புமின்றி மாற்றம் செய்வதற்கு முழு அதிகாரம் உண்டு.

**19.தற்போது வங்கிக்கு தெரிந்த அல்லது தெரியாத வில்லங்கங்களுடன் சொத்தானது விற்கப்படுகிறது. சொத்தினை வாங்குபவர்கள், சொத்தின் உரிமையாளர் அவரது உரிமை, சட்டபூர்வமான அங்கீகாரம் மற்றும் வில்லங்கங்கள் முதலானவை குறித்து தாங்களே திருப்தியானபடி தெரிந்து கொள்ள வேண்டும். மேலும் இந்த அறிவிப்புக்கு பிறகு எழும் வில்லங்கம் எதுவானாலும் அதை சொத்தை வாங்குபவரே ஏற்க வேண்டும்.**

**20. ஒரு வேளை அனைத்து டெண்டரும் நிராகரிக்குமானால் எந்தவொரு டெண்டர்தாரரும் அல்லது தனியாருடனும் சொத்து விற்பனை குறித்து தனி ஒப்பந்தம் செய்து கொள்ள அதிகாரபூர்வ அலுவலர் உடன்பாடு கொள்ளலாம்.**

**21. சொத்துக்குரிய விற்பனை தொகை, இதர செலவுகள் முழுமையாக செலுத்திய பின்னர் விற்பனை சான்றிதழ் அளிக்கப்படும்.**

**22.கடன்தாரர்/ஜாமீன்தாரர்/ அடமானதாரர்களுக்கு இதுவே விற்பனை நடத்தப்படுவது தொடர்பான அறிவிப்பாகும்.**

**உத்தேச விலைக்குறிப்பீட்டாளர்கள் சொத்தினை பார்வையிடுதல் / e-ஏல முறை போன்றவற்றின் மேலும் விபரங்களை அறிய வேலை நாட்களில் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: ஆக்ஸிஸ் பேங்க் லிமிடெட், Southern Recovery Cell: 2வது தளம்,கருமுத்து நிலையம், எண்.192, அண்ணாசாலை, சென்னை - 600 002, தொலைபேசி எண்கள். 98400 58893 / 044-28888309, அல்லது மொபைல் எண்.09840944888 அல்லது வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட சேவை வழங்குனர் M/s. e-Procurement Technologies Limited,Ahmedabad Phone No. (Praveen Kumar Thevar Contact No.09722778828) & Chennai (Ashok Nattar Contact No.9940655790/044-64520331), or through email.fasupport@abcprocure.com and praveen@abcprocure.com & ashok@abcprocure.com**

**இடம் : சென்னை**
**தேதி : 16.05.2014**

**அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி**
**ஆக்சிஸ் பேங்க் லிமிடெட்**